ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்யதர்மம்.

अयिभ्रातश्चेतः परममुपदेशं शृणु मम
स्मरारेरर्चायां पटुषु करणेषु स्मर फलम् ।
तवैषां प्रेष्याणामुपरतिकृतिश्रान्तिमहति
त्वयैकेन श्वासप्रशमसमये किंनुसुकरम् ॥ मानसोल्लासः ।

𑌅𑌯𑌿𑌭𑍍𑌰𑌾𑌤𑌶𑍍𑌚𑍇𑌤𑌃 𑌪𑌰𑌮𑌮𑍁𑌪𑌦𑍇𑌶𑌂 𑌶𑍃𑌣𑍁 𑌮𑌮
𑌸𑍍𑌮𑌰𑌾𑌰𑍇𑌰𑌰𑍍𑌚𑌾𑌯𑌾𑌂 𑌪𑌟𑍁𑌷𑍁 𑌕𑌰𑌣𑍇𑌷𑍁 𑌸𑍍𑌮𑌰𑌫𑌲𑌮𑍍 ।
𑌤𑌵𑍈𑌷𑌾𑌂 𑌪𑍍𑌰𑍇𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌮𑍁𑌪𑌰𑌤𑌿𑌕𑍃𑌤𑌿𑌶𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌹𑌤𑌿
𑌤𑍍𑌵𑌯𑍈𑌕𑍇𑌨 𑌶𑍍𑌵𑌾𑌸𑌪𑍍𑌰𑌶𑌮𑌸𑌮𑌯𑍇 𑌕𑌿𑌂𑌨𑍁𑌸𑍁𑌕𑌰𑌮𑍍 ।

சகோதரன்போல எப்பொழுதும் கூடவே விளங்கும் ஹே மனமே! உனக்கு மிகவும் சிரேயஸ்ஸைக் கொடுக்கக்கூடியதான என்னால் செய்யப்படும் உபதேசத்தைக் கேள். மன்மதனுக்குச் சத்ருவான ஸ்ரீ பரமேசுவரனை அர்ச்சித்து அதினால் எற்படும் மோக்ஷத்தைபபெற இந்திரியங்களுக்குச் சக்திக்குறைவேற்படாமலிருப்பதற்குள் முயற்சி செய். உனக்கு வேலைககாரர்களாயிருக்கும இந்த இந்திரியங்களுக்கு வேலைசெய்யும் சக்தி போய்விட்டால் சுவாஸமடங்கும் ஸமயத்தில் நீ ஒருவனாயிருந்துகொண்டு எந்தக்கார்யத்தைச் செய்யமுடியும்.

தம் பரலோகத்திற்கு வேண்டிய ஸாதனங்களை இந்திரியங்களுக்குச் சக்திக்குறைவு வருவதற்குள் அனுஷ்டிக்கவேண்டுமென்றும் அவ்விதம் அனுஷ்டிக்கத் தகுதியான யௌவனகாலத்தில் கண்டவிடங்களிலெல்லாம் கெட்ட விஷயங்களில் செல்லும் தம் மனதைப்பார்த்து ஒரு பெரியார் உபதேசிக்கிறார். ஹே மனமே! உன் வேலைக்காரர்களான இந்திரியங்கள் சுகமாக இருக்கும் ஸமயத்தில் ஸ்ரீ சங்கரரை நன்கு ஆராதித்து உத்தமமான மோக்ஷபலத்தைப் பெறவேண்டும். ஆல்லாவிடில் கடைசி காலத்தில் நீ மாத்திரம் தனியாக இருந்துகொண்டு ஒரு கார்யமும் ஸாதிக்கமுடியாது. வீணில் கஷ்டப்பட்டுக்கொண்டு ஜன்மாவையும் பயனற்றதாகச் செய்து விடுவாய். ஆகையால் இப்பொழுதே ஸ்ரீ பரமேசவரனை ஆராதிக்க வேண்டும்.

உபபத்திராதிபர்.

618

ஆர்யதர்மம்.
பிரபவ-௵ மார்கழி-௴ ௧௪௨

# மோக்ஷாதிகாரி நிரூபணம்.

श्रीरामः- भगवन्मोक्षमार्गोयः त्वया सम्यगुदाहृतः ।
तत्राधिकारिणं ब्रूहि तत्र मे संशयोमहान् ॥

ஸ்ரீராம:- பகவந்மோக்ஷமார்கோய: த்வயா ஸம்யகுதாஹ்ருத: ।
தத்ராதிகாரிணம் ப்ரூஹி தத்ர மே ஸம்ஶயோமஹாந் ॥

கைலாஸவாஸியான ஸ்ரீ சந்திரசேகரரைப் பார்த்து ஸ்ரீ ராகவன் பகவன் ஹே பரமேசுவர! உம்மால் யாதொரு மோக்ஷமார்க்கமானது நன்கு நிரூபிக்கப்பட்டதோ, அந்த மார்க்கத்தில் செல்லுவதற்கு எவர்கள் அதிகாரியாகிறார்கள் என்கிற விஷயத்தில் எனக்கு அதிகம் சங்கையிருப்பதால் அதை நிரூபிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கும்பொழுது ஸ்ரீ சங்கரர் கூறுகின்றார்.

ब्रह्मक्षत्रियविट्छूद्राः स्त्रियश्चात्राधिकारिणः ।
ब्रह्मचारी गृहस्थोवाऽनुपनीतोऽथवा द्विजः ॥
वनस्थोवाऽवनस्थोवा यतिः पाशुपतव्रती ।
बहुनात्रकिमुक्तेन यस्य भक्तिश्शिवार्चने ॥
स एवात्राधिकारी स्यात् नान्यचित्तः कथञ्चन ।

ப்ரஹ்மக்ஷத்ரியவிட்சூத்ரா: ஸ்த்ரியஶ்சாத்ராதிகாரிண: ।
ப்ரஹ்மசாரீ க்ருஹஸ்தோவாऽநுபநீதோऽதவா த்விஜ: ॥
வநஸ்தோவாऽவநஸ்தோவா யதி: பாஶுபதவ்ரதீ ।
பஹுநாத்ரகிமுக்தேந யஸ்ய பக்திஶ்ஶிவார்சநே ॥
ஸஏவாத்ராதிகாரீ ஸ்யாத் நாந்யசித்த: கதஞ்சந ।

பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் இவர்களும் பிர்மசாரி, கிருஹஸ்தன், உபநயனமாகாத பையன், வானப்பிரஸ்தன், யதி, பாசுபதவிரதமுடையவன் இவர்களுக்குள் எவர்களாயிருந்

தாலும் அதிகாரிகள்தான். அதிகம் எதற்காக விரிக்கவேண்டும்? எவனுக்கு ஸ்ரீ பரமசிவனைப் பூஜிப்பதில் பக்தியிருக்கின்றதோ, அவன் இதற்கு அதிகாரிதான். இவ்விதமின்றி வேறுவிதமான சித்தவிருத்தியையுடையவன் ஒருகாலும் இதற்கு அதிகாரியாக மாட்டான்.

जडोऽन्धोबधिरोमूकोनिश्शौचः कर्मवर्जितः ।
अज्ञोपहासाभक्ताश्च भूतिरुद्राक्षधारिणः ॥
लिङ्गिनोयश्चवाद्वेष्टि तेनैवात्राधिकारिणः ।

𑌜𑌡𑍋𑌽𑌨𑍍𑌧𑍋𑌬𑌧𑌿𑌰𑍋𑌮𑍂𑌕𑍋𑌨𑌿𑌶𑍍𑌶𑍌𑌚𑌃 𑌕𑌰𑍍𑌮𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃 ।
𑌅𑌜𑍍𑌞𑍋𑌪𑌹𑌾𑌸𑌾𑌭𑌕𑍍𑌤𑌾𑌶𑍍𑌚 𑌭𑍂𑌤𑌿𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌧𑌾𑌰𑌿𑌣𑌃 ॥
𑌲𑌿𑌂𑌗𑌿𑌨𑍋𑌯𑌶𑍍𑌚𑌵𑌾𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌿 𑌤𑍇𑌨𑍈𑌵𑌾𑌤𑍍𑌰𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌿𑌣𑌃 ।

அறிவில்லாதவன், குருடன், செவிடன், ஊமை, ஆசாரமற்றவன், விஹிதகர்மங்களை விட்டவன், பிறரை மூடனென்று பரிஹஸிப்பவன், பக்தியில்லாதவன், விபூதி, ருத்திராக்ஷம் தரிப்பவர்களையும், ஆசிரமதர்மங்களை அனுஷ்டிப்பவர்களையும் த்வேஷிப்பவன், இதற்கு ஒருபொழுதும் அதிகாரியாக மாட்டான்.

योमां गुरं पाशुपतं व्रतं द्वेष्टिनराधिप ।
विष्णुं वा स नमुच्येत जन्मकोटिशतैरपि ॥

𑌯𑍋𑌮𑌾𑌂 𑌗𑍁𑌰𑍁𑌂 𑌪𑌾𑌶𑍁𑌪𑌤𑌂 𑌵𑍍𑌰𑌤𑌂 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌿𑌨𑌰𑌾𑌧𑌿𑌪 ।
𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂 𑌵𑌾 𑌸 𑌨𑌮𑍁𑌚𑍍𑌯𑍇𑌤 𑌜𑌨𑍍𑌮𑌕𑍋𑌟𑌿𑌶𑌤𑍈𑌰𑌪𑌿 ॥

ஹே நராதிப! ஜனங்களுக்கு அதிபதியான அரசனே எவர்கள் என்னையும் குருவையும் பசுபதிவிரதத்தையும் விஷ்ணுவையும் த்வேஷிக்கிறார்களோ அவர்கள் எவ்வளவு கோடி ஜன்மாவை எடுத்தாலும் ஸம்ஸாரபந்தத்திலிருந்து விடுபடமாட்டார்கள்.

अनेककर्मसक्तोपि शिवज्ञानविवर्जितः ।
शिवभक्तिविहीनश्च संसारान्नैवमुच्यते ॥

𑌅𑌨𑍇𑌕𑌕𑌰𑍍𑌮𑌸𑌕𑍍𑌤𑍋𑌪𑌿 𑌶𑌿𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌃 ।
𑌶𑌿𑌵𑌭𑌕𑍍𑌤𑌿𑌵𑌿𑌹𑍀𑌨𑌶𑍍𑌚 𑌸𑌂𑌸𑌾𑌰𑌾𑌨𑍍𑌨𑍈𑌵𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

பல கர்மாக்களில் பற்றுதலை அடைந்திருந்தாலும் சிவஞானமில்லாமலும் சிவபக்தியன்றியிலும் இருப்பானுகில் அவனுக்கு ஸம்ஸாரத்திலிருந்தும் விடுதலையில்லை.

आसक्ताः फलसङ्गेन ये त्ववैदिककर्मणि ।
दृष्टमात्रफलास्तेतु नमुक्तावधिकारिणः ।
𑌆𑌸𑌕𑍍𑌤𑌾𑌃 𑌫𑌲𑌸𑌙𑍍𑌗𑍇𑌨 𑌯𑍇 𑌤𑍍𑌵𑌵𑍈𑌦𑌿𑌕𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 ।
𑌦𑍃𑌷𑍍𑌟𑌮𑌾𑌤𑍍𑌰𑌫𑌲𑌾𑌸𑍍𑌤𑍇𑌤𑍁 𑌨 𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌵𑌧𑌿𑌕𑌾𑌰𑌿𑌣𑌃 ॥

எவர்கள் பலத்தில் விருப்பமுள்ளவர்களாய்க்கொண்டு சாஸ்திர விரோதமான கர்மாக்களை அனுஷ்டித்து அதினாலேற்படும் அற்ப பலத்தையடைகிறார்களோ அவர்கள் முக்திமார்க்கத்தில் செல்ல அதிகாரிகளாக ஆகமாட்டார்கள்.

अविमुक्ते द्वारकायां श्रीशैले पुण्डरीकके ।
देहान्ते तारकं ब्रह्म लभते मदनुग्रहात् ॥
𑌅𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑍇 𑌦𑍍𑌵𑌾𑌰𑌕𑌾𑌯𑌾𑌂 𑌶𑍍𑌰𑍀𑌶𑍈𑌲𑍇 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌕𑍇 ।
𑌦𑍇𑌹𑌾𑌨𑍍𑌤𑍇 𑌤𑌾𑌰𑌕𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌲𑌭𑌤𑍇 𑌮𑌦𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌤𑍍 ॥

ஸ்ரீகாசி த்வாரகை ஸ்ரீசைலம் புண்டரீகம் என்று பெயர்வாய்ந்த இந்த சிறந்த க்ஷேத்திரங்களில் எவர்கள் வஸித்து மரணத்தையும் அடைகிறார்களோ அவர்கள் முடிவுகாலத்தில் என்னுடைய அநுக்கிரஹத்தால் முக்தியை அளிக்கக்கூடிய பிர்மஸ்வரூபமான தாரகம் என்னும் மஹாமந்திரத்தைப் பெறுகிறார்கள்.

यस्य हस्तौच पादौच मनश्चैव सुसंयुतम् ।
विद्या तपश्च कीर्तिश्च सतीर्थफलमश्नुते ॥
𑌯𑌸𑍍𑌯 𑌹𑌸𑍍𑌤𑍌𑌚 𑌪𑌾𑌦𑍌𑌚 𑌮𑌨𑌶𑍍𑌚𑍈𑌵 𑌸𑍁𑌸𑌂𑌯𑌤𑌮𑍍 ।
𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌤𑌪𑌶𑍍𑌚 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌶𑍍𑌚 𑌸𑌤𑍀𑌰𑍍𑌥𑌫𑌲𑌮𑌶𑍍𑌨𑍁𑌤𑍇 ॥

எவனுடைய கைகள் கால்கள் மனம் வித்தை தவம் கீர்த்தி இவைகள் மிகவும் அடக்கமுள்ளவைகளாய் இருக்கின்றனவோ அவன் புண்யக்ஷேத்திரம் தீர்த்தம் இவைகளில் பலனை அடைகிறான்.

विप्रस्यानुपनीयस्य विधिरेवमुदाहृतः ।
नाभिव्याहारयेद्ब्रह्म स्वधानिनयनादृते ॥
नशूद्रेण समस्तावत् यावद्वेदान्नजायते ।
नामसंकीर्तने ध्याने सर्वएवाधिकारिणः ॥
𑌵𑌿𑌪𑍍𑌰𑌸𑍍𑌯𑌾𑌨𑍁𑌪𑌨𑍀𑌤𑌸𑍍𑌯 𑌵𑌿𑌧𑌿𑌰𑍇𑌵𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌃 ।
𑌨𑌾𑌭𑌿𑌵𑍍𑌯𑌾𑌹𑌾𑌰𑌯𑍇𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑍍𑌵𑌧𑌾𑌨𑌿𑌨𑌯𑌨𑌾𑌦𑍃𑌤𑍇 ॥

ந ஶூத்ரேண ஸமஸ்தாவத் யாவத்வேதா ஜாயதே ।
நாமஸங்கீர்தநே த்யாநே ஸர்வஏவாதிகாரிண: ॥

உபநயநமாகாத ஒரு த்விஜன் சூத்திரனுக்குச் சமம். அவன் பிதுர்கர்மங்களில் வேதமந்திரத்தைச் சொல்வதைத் தவிர மற்றொரு ஸமயமும் சொல்லக்கூடாது என்று விதிக்கப்பட்டிருந்தாலும் நாமஸங்கீர்த்தனம் தியானம் என்பவைகளில் எல்லாரும் அதிகாரிகள் தான். (தொடரும்)

உபபத்திராதிபர்.

---

# விவாஹ வயது மசோதா.

(720-வது பக்கத்தொடர்ச்சி)

மிஸ்டர் ஸர்தா சொல்லும் மனுவின் வசனத்தை சற்று கவனிப்போம். மனு அத்தியாயம் 9 சுலோகம் 90-ல் "ஒரு பெண் ருதுவான காலம்முதல் மூன்று வருஷம் பொறுத்திருக்கவேண்டியது. இதற்கு மேற்பட்டுத்தகுந்த வரனை அடையவேண்டியது." இந்த சுலோகத்துக்கு மிஸ்டர் ஸர்தா கொண்ட அர்த்தம் தவறு. ஸ்மிருதிவசனங்களுக்கெல்லாம் முன்பின் வசனங்களைக்கொண்டும் ஸந்தர்ப்பத்தை ஒட்டியும் வியாக்யானங்களை அனுஸரித்தும் அர்த்தம் செய்யவேண்டியது. இந்த வசனத்துக்கு அர்த்தம் என்னவெனில் "பிதா முதலானவர்களால் ருதுவிற்குமுன் தகுந்த வரனுக்குக் கொடுக்கப்படாமல் ஒரு பெண் ருதுவாகிவிட்டால், தன்னை விவாஹம் செய்துகொடுப்பதை மூன்று வருஷம்வரையில் எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டியது. இந்தக்காலத்திற்குள்ளும் கொடுக்கப்படாவிட்டால் மூன்று வருஷத்திற்கு மேற்பட்டு தன் ஜாதி, அந்தஸ்து, குலம்முதலியன பொருந்திய ஒருவரைத் தானாகவே வரித்துக்கொள்ளவேண்டியது." ஆகையால் "பெண் 13-வது வயதில்ப்ரௌடையாவாள் அதுமுதல் மூன்றுவருஷம், ஆகமொத்தம் 16-வயது பூர்த்தியாவதற்குள் விவாஹம் நடைபெறக்கூடாதென்பது மனுவின் தாத்பர்யம்" என்று மிஸ்டர் ஸர்தா சொல்வது விபரீதம்.

தவிரவும் மனு அத்யாயம் 9, சுலோகம் 94-ல் "30 வயதுள்ள வரன் 12 வயதுள்ள கன்னிகையையும், 24 வயதுள்ள

வான் 8 வயதுள்ள கன்னிகையையும் விவாஹம் செய்துகொள்ள வேண்டியது " இந்த வசனத்தால் பெண்களுக்கு விவாஹத்திற்கு குறைந்த வயது எட்டு என்றும் உயர்ந்த வயது பனிரண்டு என்றும் மனு தன் அபிப்ராயத்தை ஸ்பஷ்டமாய் சொல்லியிருப்பதற்கு மிஸ்டர் ஸர்தா என்ன ஸமாதானம் சொல்வார் ?

கிறிஸ்துமதஸ்தர்களைப்போல் உலகந்தோன்றி இப்பொழுது 5931 வருஷங்கள்தான் ஆகின்றன என்ற நம்பிக்கை இந்துக்களுக்கில்லை. அன்றியும் மனிதர்களால் வேதம் ஒரு காலத்தில் எழுதப்பட்டதாகவும் வேதகாலம் என்பது கி. மு. 1500—2000 கி. மு. என்றும் ப்ராஹ்மணம் எழுதப்பட்ட காலம் உபநிஷத் எழுதப்பட்டகாலம் என்றும், மநுஸ்மிருதி கி. மு. 500 என்றும் ஆரியர்கள் எங்கோ ஆசியாகண்டத்தின் மத்தியபாகத்திலிருந்து சுமார் 4000 வருஷங்களுக்கு முன் இந்தியாவில் குடியேறினர்கள் என்றும் சுமார் 400 வருஷங்களுக்கு முன் இந்தியா என்கிற ஸம்ருத்தமும் விசாலமுமான தேசம் ஒன்றிருப்பதைக் கூட தங்கள் முன்னோர்கள் அறிந்திராத ஐரோப்பியர்களில் சிலர், தங்கள் யுக்திகளைக்கொண்டு சென்ற சில வருஷங்களாகச் சொல்லிவரும் கல்பனைகளை யதார்த்தத்தில் வேதத்தை அறிந்த ப்ராம்மணர்கள் ஒப்புக்கொள்ளுகிறதில்லை. கிருத, திரேதா, துவாபர, கலி ஆக நாலு யுகங்கள் கொண்டது ஓர் சதுர்யுகம் என்றும் கலியுகம் 4,32000 வருஷங்கள் கொண்டதென்றும் இதில் இப்பொழுது 5028-ம் ஆண்டு நடந்து வருவதாகவும், ஒரு சதுர்யுகம் என்பது 43,20000 வருஷங்கள் கொண்டதென்றும் இதுவரையில் எத்தனையோ சதுர்யுகங்கள் சென்றுவிட்டதாகவும் இந்துக்களின் நம்பிக்கை. மநுஸ்மிருதி கிருதயுகத்திற்கும், திரேதாயுகத்திற்கு கௌதமஸ்மிருதியும், துவாபரயுகத்திற்கு சங்கலிகிதஸ்மிருதிகளும், கலியுகத்திற்கு பாராசரஸ்மிருதியும் ப்ரமாணங்கள். பாராசரஸ்மிருதி அத்தியாயம் 7. சுலோகங்கள் 4—8, எட்டு வயது பெண்ணுக்கு கௌரீ என்றும் ஒன்பது வயதில் ரோஹிணீ என்றும் 10 வயது பெண்ணுக்கு கன்னிகை என்றும் அதற்கு மேற்பட்டு 12 வயதிற்குள் பெண்ணை விவாஹம் செய்துகொடுக்காத பெற்றோர்களும் தமயனும் நரகத்தையடைகிறார்களென்றும் அப்படிப்பட்ட ருதுவான பெண்ணை விவாஹம் செய்த ப்ராம்மணனை பங்தியில் வைத்துக்கொள்ளவாவது அவனுடன் பேசவாவது கூடாது,

அவன் வ்ருஷலீபதி ப்ராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டும் என்றும் ஸ்பஷ்டமாய் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் மிஸ்டர் ஸர்தா கொண்டிருக்கும் அபிப்பிராயம் முற்றிலும் தவறு

இந்த மசோதாவைக்கொண்டு வருவதற்குக் காரணம்ஸென்ஸஸ் கணக்குப்படி 12-வயதிற்குட்பட்டு பால்ய விதவைகள் இருப்பதாகவும் சில அறியாத ஜனங்கள் ஒரு வயது பெண் குழந்தையைக் கூட விவாஹம் செய்வித்து விடுவதாகவும் அந்நியநாடுகளில் பெண்களுக்கு 16-ம் ஆண்களுக்கு 20-ம் விவாஹவயதுகளாக சட்டங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் விதவைகளுக்கு மறுமணம் செய்யமுடியாத இந்தியாவில் 12 வயதுக்குட்பட்ட மட்டிலாவது விதவைகள் இல்லாமல் செய்யக் கூடும் என்பதுதான்'

மிஸ்டர் ஸர்தா பெண்ணுக்கு விவாஹவயது பதினொன்றுவது வயது ஏற்பட வேண்டுமெனறும் ஆண்களுக்குப்பகுத்தறிவு காலமாகிய 18வயதாவது ஏற்படவேண்டுமென்றும் குழந்தைப் பருவத்தில் விவாஹம் செய்விக்கும் வழக்கம் ஸமீபகாலத்தில் ஏற்பட்டதென்றும் இதற்கு சாஸ்திரத்தில் ஆதாரம் இல்லையென்றும் இக்கொடிய பழக்கம் நிறுத்தப்படாவிட்டால் இனி பிறக்கும் பிள்ளைகள் ஸ்வராஜ்யத்திற்காகபோர்புரியப்போதுமான சக்தியற்றவர்களாக இருப்பார்களென்றும் சொல்லுகிறார்.

பிள்ளைகளின் வயதைப்பற்றி ஆக்ஷேபிப்பவர் அனேகமாய் இல்லை. பெண் குழந்தைகளின் விவாஹகாலத்தைப்பற்றி பகுத்தறிவுள்ள எவரும் நன்கு யோசிக்கவேண்டியது அவசியமே. மநு பராசர இவவிரு ஸ்மிருதிகளின்படி எட்டு வயதிற்குட்பட்டு பெண்களை விவாஹம் செய்வித்தல் சாஸ்திர விரோதம். குழந்தைகளுக்கு பால்யத்தில் ஏற்படக் கூடிய அரிஷ்டங்கள், வியாதிகள் முதலியவற்றை உத்தேசித்து பத்து வயதாகும் வரையில் கூட நிறுத்திக் கொள்ளலாம். சுருதியை யார்கண்டார்கள் ஸ்மிருதியை யார்கண்டார்கள் என்று விதண்டாவாதம் செய்யும் விராத்தியர்கள் ப்ராம்மண ஸமூஹத்திலிருந்து கொண்டு மற்ற ப்ராம்மணர்களுக்கும் கெட்ட பெயரைஉண்டாக்குவதைப் பார்க்கிலும் தாங்களே விலகிவிடுவது உத்தமம் சுருதிஸ்மிருதிக்குக் கட்டுப்பட்டுப் பேசும் ப்ராம்மணர்கள் மேற்கூறிய ப்ரமாண வசனங்களுக்குக் கட்டுப்பட்டு தங்கள் பெண்களை 10 முதல்12வயது

பூர்த்தியாவதற்குள்ளாவது ரஜஸ்வலையாவதற்கு முன் கண்டிப்பாய் விவாஹம் செய்துகொடுத்தே தீரவேண்டும். இதற்கு மேற்பட்டு பெண்ணுக்கு வைதவ்யம் நேரிட்டால் அதை ஜன்மாந்தரீய கர்மாவின் பலனாக எண்ணி பொறுமையுடன் இருக்கவேண்டும்.

ப்ராமணர்களுக்கு வந்திருக்கும் அத்ருஷ்டம் ஷடி விவாக வயது மசோதாவோடு நிற்கவில்லை. மிஸ்டர் ஸர்தா பெண்களுக்கு 12 வயதுக்குட்பட்டு கல்யாணம் செய்யக் கூடாதென்ற ஒரு சட்டம் வேண்டுமென்கிறார். டாக்டர் ஹரிஸிங் கவர் என்பவர் அக்னிஸாக்ஷியாக பாணிக்ரஹணம் செய்த கணவன் 16 அல்லது குறைந்தது 14 வயதிற்குட்பட்ட தன் மனைவியைப் புணர்வது கிரிமினல் குற்றமென ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட வேண்டுமென்று டில்லி சட்டசபையில் வெகு நாளாய் சிரமப்படுகிறார். இதின் முக்கிய தாத்பர்யம் என்னவெனில் இந்தியாவில் பெண்கள் பௌளடையான கொஞ்சகாலத்திற்குள் புருஷன் சேர்க்கை ஏற்பட்டுப் பிறக்கும் குழந்தைகள் மிக்க பலவீனமாயிருக்கின்றனவாம். 16 வயதிற்குமேற்பட்டு பெண்களுக்கு புருஷன் சேர்க்கை ஏற்பட்டால் கஷ்க்கு முஷ்க்குனு கொழுக்கட்டை பிள்ளைகளாகப் பிறக்குமாம். பிள்ளைகள் மிக்கபலசாலிகளாகயிருப்பார்களாம். சீக்கிரம் ஸ்வராஜ்யம் கைக்கு வந்துவிடுமாம்.

ப்ராம்மணர்கள் ராஜாவாக இருந்ததாக எந்த புராதன சரித்திரத்திலும் இல்லை. மஹா ப்ராம்மணனாகிய மாதவாசார்யார் ராஜாவாக இருந்து ஆளக்கூடிய சக்தியிருந்துங்கூட அராஜகமாயிருந்த வித்யாநகரம் (பல்லாரி ஜில்லாவில் தற்காலம் ஹம்பி) என்ற ராஜ்யத்தில் யாதவகுலத்தில் பிறந்த புக்கன் என்பவனை ராஜாவாகச்செய்து தான் அவனுக்கு மந்திரியாக இருந்துவந்தார். ப்ராம்மணர்கள் க்ஷத்திரியதர்மத்தை ஆசிரயித்து யுத்தம் செய்யப்போவதில்லை. ப்ராஹ்மம அல்லது ப்ராஜாபத்ய விவாஹத்தில் குற்றமற்ற வம்சங்களில் பிறந்த நல்ல பெண்களை ருதுவாவதற்கு முன் விவாஹம் செய்து தானுள்பட முன் தலைமுறை பத்து பின் தலைமுறை பத்து ஆக 21 தலை முறைகளைக்கரையேற்றும் ஸத்புத்திரர்களைத் தான் வைதிக சிரத்தையுள்ள ப்ராம்மணர்கள் அபேக்ஷிக்கிறார்கள். தங்கள் வைதிககர்மாக்களை நடத்திவரத்தங்களுக்கிருக்கும் சரீரபலம் போதும் என்று ப்ராம்மணர்கள் திருப்தி

அடைந்திருக்கிறார்கள். டாக்டர் கவர் கேட்கும் சட்டமும் ஏற்பட்டு விட்டால் ப்ரௌடையான பெண்களைத் தகப்பன் தன் வீட்டிலேயே வைத்துக்கொண்டு 13 முதல் 16 வரையில் நாலு வருஷ காலம் காப்பாற்றுவது எவ்வளவு சிரமம் என்பதை யோசியுங்கள். ஆகையால் டாக்டர் கவர் தான் கொண்டுவந்திருக்கும் மசோதாவில் தன்னுடைய அபிப்பிராயத்திற்கிணங்கி தன்னுடைய சீர்திருத்தங்களை அபேக்ஷிக்கிறவர்களுக்கு மாத்திரம் சட்டம் செய்யக் கேட்கும்படிக்கும், பிராமணர்கள் யாவரையும் அதில் சேர்க்க வேண்டாம் என்பதும் நமது கோரிக்கை.

இதர இந்துக்கள், பெண்களுக்கு 12 வயது பூர்த்தியாகும் வரையில் விவாஹம் செய்விக்கக் கூடாதென்றும் ப்ராஹ்மணர்கள் மாத்திரம் 10 வயதிற்குட்பட்டு செய்விக்கக் கூடாதென்றும் ஒரு சட்டம் அமுலுக்கு வந்தால் எல்லோருக்கும் ஸம்மதந்தானே என்று கேட்கும் பக்ஷத்தில் இதை நாம் தகுந்த காரணத்தைக் கொண்டு ஆக்ஷேபிக்கிறோம்.

கவர்ன்மெண்டார் மதவிஷயத்தில் பிரவேசிப்பதில்லை என்று நமக்கு ப்ரதிக்ஞை செய்து கொடுத்திருக்கிறார்கள். உண்மையில் அவசியம் இருப்பது போலச் சொல்லி அவர்களை நம்மவர்களே தூண்டிவிட்டு மதவிஷயங்களில் மாறுதல்களைச் செய்ய இடம் கொடுத்தால் இதைப்பார்க்கிலும் விரோதமான மசோதாக்கள் இனி கொண்டுவரப் பட்டு வேறு ஸந்தர்ப்பங்களில் இந்து ஜன ஸமூஹத்திற்கும் மதக்கொள்கைகளுக்கும் விசேஷ அநர்த்தம் நேரிடும். சட்டஸபைகளில் ப்ராம்மண மெம்பர்களும் இதர மெம்பர்களும் ப்ராம்மணர்களுடையவும் இதர இந்துக்களுடையவும் மதக்கொள்கைகளை நன்கறிந்தவர்களாவும் ஜனங்களின் அபிப்பிராயத்தை அறிந்துதான் சொல்லுகிறார்கள் என்றும் நினைக்க இடமில்லை. ஜனங்கள் சட்டசபைகளுக்கு மெம்பர்களைத் தேர்ந்தெடுத்தனுப்பியது ராஜீய விஷயங்களைப் பற்றி மாத்திரம் பேசுவதற்காக, இவர்களுக்கு மதவிஷயத்தில் எள்ளளவும் பரிச்சியமில்லை. ஆகையால் மதவிஷயங்களை சட்டஸபைகளில் கொண்டுவரக்கூடாது. மதவிஷயங்களைப்பற்றி சட்ட சபைகளில் பேசி நிர்த்தாரணம் செய்ய இவர்களுக்கு ஜனங்கள் அதிகாரம் கொடுக்கவில்லை, மத விஷயங்களில் திறமை வாய்ந்தவர்களை மெம்பர்களாகத் தேர்ந்தெடுக்கும்படி ராஜாங்கத்தார் ஜனங்களைக் கேட்கவுமில்லை,

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.



அன்றியும் சில வருஷங்களாக தென்னிந்தியாவில் வகுப்பு வாரி பிரதிநிதித்வ விஷயமாயும் உத்தியோகமுறைமையிலும் உண்டாகியிருக்கும் ப்ராம்மணரல்லாதார் கிளர்ச்சியால் ப்ராம்மணரல்லாத இந்து மெம்பர்கள் இதர ஜாதி மெம்பர்களோடு சேர்ந்து கொண்டு ப்ராம்மணர்களை மாத்திரம் பாதிக்கக் கூடிய இம்மாதிரி மசோதா விஷயங்களில் விரோதமே செய்து பரம ஸாதுக்களும் ஏழைகளும் கர்மசிரத்தையுள்ளவர்களுமான வைதிகப் பிராமணர்களைக் கிரிமினல் கோர்ட்டு முதலான அனேக ஸங்கடங்களுக்குள்ளாக்கி விடுவார்கள்.

ஸநாதநதர்மத்தின் புராதன ஆசார அநுஷ்டானங்களை சிரத்தையுடன் அநுஷ்டித்துவரும் சிறுபான்மையான வைதிகப்ராம்மண ஸமூஹத்தையும் தங்கள் ப்ரஜைகளில் ஒரு முக்கிய அம்சமாக கவர்ன்மெண்டார் நினைப்பது வாஸ்தவமானால் இவ்வித மத ஸம்பந்தமான மசோதாக்களுக்கு சட்ட ஸபைகளில் இடங்கொடுக்கக்கூடாது தொன்றுதொட்டு இந்த ஸமூஹம் ராஜாக்களின் ஆதரவிலேயே இருந்துவந்து உலகத்துக்கு விசேஷ நன்மையை செய்து வந்திருக்கிறது. தற்காலம் அரசாக்ஷி செய்யும் பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரும் அவ்விதமே ஆதரித்து வருவார்களென்று ஸநாதந தர்மிகள் எதிர்பார்க்கிறார்கள்.

இந்த விவாஹ வயது மசோதா 15—9—27 ல் ஸிம்லாவில் எடுக்கப்பட்டு இப்பொழுது ஸெலெக்ட் கம்மிட்டியாரின் ஆலோசனைக்கு விடப்பட்டிருக்கிறது. இதை மறுபடியும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள இன்னும் சுமார் 3 மாதம் செல்லும். இக்காலத்திற்குள் ஆங்காங்குள்ள விவேகிகள் மீட்டிங்குகள் கூடி 10 முதல் 12 வயதுக்குள் (ருதுவாவதற்கு முன்) ப்ராம்மணர்கள் மாத்திரம் பெண்களை விவாஹம் செய்துகொடுப்பது சாஸ்திர நிர்ப்பந்தமென்றும், ப்ராம்மணரல்லாத இந்துக்கள் இஷ்டமானால் 12 வயதுக்கு மேற்பட்டு செய்வதில் தங்கள் வழக்கத்திற்கு எவ்வித ஆக்ஷேபமும் இல்லையென்பதை ஜனங்களுக்கு ஸ்பஷ்டமாய் தெரிவித்து இவ்வயதுகளுக்குட்பட்டு பெண் குழந்தைகளுக்கு விவாஹம் நடைபெறுமல் செய்யும்படிக்கும், தற்காலம் சட்ட ஸபையில் கொண்டுவரப்பட்டிருக்கும் விவாஹ வயது மசோதா ஸம்போக வயது நிர்ணய மசோதா (Age of Consent Bill)

இவ்விரண்டையும் அடியோடு தள்ளிவிடும்படி கனம் ராஜப்பிரதிநிதி அவர்களுக்கு மனு செய்து கொள்ளும்படிக்கும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தீர்மானம்:— ஹிந்துமத ஸமூஹ அமைப்புகளில் எவ்வித குற்றமுமில்லையென்றும், திருத்தப்படவேண்டிய சில கெடுதல்கள் சில ஜனங்களிடம் காணப்படுவது அவர்களின் அறியாமையால் என்றும், அக்கெடுதிகளைத் திருத்த தீர்க்காலோசனையில்லாத சில சீர்திருத்தக் காரர்கள் விவாஹ வயது மசோதா, ஸம்போக வயது நிர்ணய மசோதா முதலான சட்ட பலத்தால் புராதன சட்ட அமைப்புகளையே மாற்றிவிட யத்தனிப்பது பயனற்றதும் விபரீதத்தைக் கொடுக்கக் கூடியதென்றும் இச்சீர்திருத்தக்காரர்களுடைய விஷயமுயற்சிகளை பலமாகக் கண்டிப்பதுடன் இந்தியாவிலுள்ள ப்ரஜைகளின் மதவிஷயத்தில் பிரவேசிப்பதில்லையென்று பிரதிக்ஞை செய்து கொடுத்திருக்கும் ராஜாங்கத்தார் இச்சீர்திருத்தக் காரர்கள் கொண்டுவந்திருக்கும் மசோதாக்களை ஆதரியாமல் அடியோடு தள்ளிவிடும்படிக்கும் ஏற்கனவே இவ்வமைப்புகள் நன்மையைக் கொடுத்து வந்தப் பிரகாரம் நடைபெறுவதற்கு சுருதிஸ்மிருதிக்கு விரோதமில்லாத ஏற்பாடுகளைச் செய்து இக்கெடுதல்களை நிவர்த்திக்கும்படிக்கும், கனம் ராஜப்ரதிநிதி அவர்களை இந்த மஹாநாடு வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறது.

---

☞ இது ஸம்பந்தமான கடிதப்போக்குவரத்துக்களை அடியிற்கண்ட விலாஸத்திற்கு எழுதக் கோரப்படுகிறது.

T, S. நடேசசாஸ்திரியார்,
"வால்மீகி" மாயவரம், தஞ்சாவூர் ஜில்லா.

---

## காந்தியடிகள் கூறும் விதவாமறுவிவாகத்திற்கு வங்காளப்பள்ளி ஆசாரியாரின் மறுப்பும், அதற்கு காந்தியவர்கள் தமது "யங் இந்தியா" வில் கூறும் சமாதானம் சரியல்லவென்பதும்.

(688-வது பக்கத்தொடர்ச்சி)

ஏனெனில் இதனால் சம்போகமேற்படுமுன் புருஷனிறந்த 17, 18 வயது மங்கயருக்கு மறு விவாஹவசதி ஏற்படவும் சம்போகமேற்பட்டும் அவ்வில்லற வாழ்க்கைக்குற்ற மக்கட்பேறு

அடையாத 13, 14 வயதுச் சிறுமிகளுக்கு விவாஹமில்லாமல் போய்விடுவதற்கும் இடமாகின்றது. நான்காவது பிரமாணத்தை யோசிக்குமிடத்தும் நீண்டகாலம் இல்லறத்தைப் பின்பற்றியும் மக்கட்பேறின்றித் தனது ஐம்பதாம் பிராயத்தில் புருஷனையிழந்த சிறுமிக்கு மறுவிவாஹமும் இருபது வயதிலேயே புருஷன் காலகதியடைந்தாலும் புத்திர பாக்கியத்தைப் பெற்ற காரணத்தினால் இவ்விருவது வயது சென்ற கிழவிக்கு மறுமணமின்றியும் ஆய்விடும். இது என்ன விந்தையிலும் விந்தை! கடைசியாகவுள்ள பிரமாணத்தைக் குறித்து நாம் அதிகம் கவனிக்க வேண்டுவதில்லை. ஏனெனில் சிற்றின்பத்திற் பற்றுள்ளவரைபால்ய விதவைகளெனவே கொள்வோமாயின் பாலியம் விருத்தாப்பியம் என்ற இவ்விருபிரிவுகளுமே யாதொருஅர்த்தமுமின்றி ஆய்விடும். ஆகவே, பாலியவிதவைகளெனவும், விருத்த விதவைகளெனவும் எத்தகைய ஆதாரங்கொண்டும் வகுக்கவியலாதென்றும் அவ்விதம் வகுப்பதால் பற்பலசங்கடங்களுக்கும் அபிப்பிராயபேதங்களுக்குமிடமேற்படுமெனக் கருதியே நமது முன்னோர்கள் விதவைகளுக்கெனப் பொதுவிதியும் பாலிய விதவைகளுக்கென விலக்குவிதியும் ஏற்படுத்தாது ஏனைய விதவைகளுக்கும் மறுமணம் கூடாதென விதித்தனர்.

அஃது ஓர் புறமிருக்க யாம் இங்கு காந்தியடிகளை ஒன்று தாழ்மையுடன் கேட்கின்றோம். அதுவும் பாலிய விதவைகளை விதவைகளெனவிவகரித்தல் தவறென்றும் பாலியவிதவைகளுக்கு செய்யப்படும் விவாகம் மறுவிவாகமன்றெனவும் அங்ஙனம் முன் செய்த விவாகமானது உண்மை விவாகமாகாததுபற்றி பின்பு செய்யப்படும் மறுமணத்தை முதல் விவாகமென்றே கருதவேண்டுமெனவும் காந்தியவர்கள் எக்காரணங்கொண்டு உபதேசிக்கின்றார்கள் என்பதேயாம். இதனால் பால்ய விதவைகளுக்கு முதன் முதலாகச் செய்யப்பட்ட விவாகமானது உண்மையில் விவாகமெனச் சொல்லத்தகாததும் ஆனால் பொதுப்படையாக விவாஹமெனத் தவறுதலாக விவகரிக்கப் பெறும் ஓர்வித போலி சம்ஸ்காரமென ஏற்படுகிறது. எனவே அது அசாஸ்திரீயமான ஓர் போலி சாஸ்திர ஸம்ஸ்காரம். அதுபோலவே சிறுவயதில் நேரிடும் வைதவ்யதுக்கமும் உண்மையில் வைதவ்யமென்று சொல்லத்தகாததும் ஆனால் பிறிதாக வைதவ்யமெனக் கருதப்படும்

ஓர் போலி வைதவ்யமுமாம்! இவ்விதம் துணிந்து சாற்றுவது
அதிநூதனமான ஓர் விரோத ஆபாஸமாகவன்றோ புலப்படுகின்
றது. இவ்வசனங்களின் பான்மையாயிருந்தவாறு நன்று நன்று
வெகு நன்று! இதற்கும் இப்பத்திரிகையின் முன் சஞ்சிகைகளிற்
கூறப்பட்டுள்ள பதிலையே யாம் இங்கு மீண்டும் வற்புறுத்த
வேண்டி வருகின்றது. என்னெனில் பாலிய விதவைகளுக்கு
முன் செய்யப்பட்ட விவாகமானது சாஸ்திர முறைப்படி யனுஷ்
டிக்கப் பெறாததும் பதியைக் கொல்லுவதற்கெனவும் இயற்றப்
பட்ட ஓர் விதப்ரயோகம் போலும்! முன்பு செய்யப்பட்டு
ள்ள விவாகத்தினாலேமட்டில் பதியுடன் சுகித்து இல்லறம் நடாத்
தும் பெண்மணிகளே விவாகமானவர்கள் அவ்விதமின்றிப் பதி
யை யிழந்தவர்கள் விவாகம் ஆகாதவர்கள் போலும்! விதவைக
ளின் மறுமணம் பொதுவாக எக்காலத்திலுமே செய்வது உசித
மன்றெனவும் அதுவும் கலியுகத்தில் ஒருக்காலும் கூடாதென
வும் கூறி நிற்கும் பழஞ்சுவடிகளான நமது சாஸ்திரங்கள் தற்கா
லத்திற்கனுகுணமானவை அல்லவென அவற்றைப் புறக்கணித்து
யுக்தி வாதத்தைக்கொண்டு பார்ப்பினும் அதற்கும் ஒவ்வாததாக
வன்றோ இருக்கின்றது இக்கூற்று. தனது துர்பாக்கியத்தால் பாலிய
வயதிற்பதியை இழக்க நேரிடுமேல் அது விவாகமெனும் உயர்ந்த
சம்ஸ்காரத்தின் பேரிலா குற்றம்?

மற்றும் காந்தியவர்களும் பலாத்காரத்தின் காரணமாய் வித
வைகளால் பின் இப்பிரும்மசரியமானது ரகசியமான துர்நடத்தை
களுக்கு இடங்கொடுத்து நமது ஸ்திரீஜனசமூக வாழ்க்கையை
யும் சீர்குலைத்து விடுகின்றதெனவும் சொல்லியிருக்கின்றார். இவ்
விதப் பிரம்மசரிய அனுட்டானமும் பலாத்காரத்தின் காரணத்
தால் பின்பற்றப்படுவது அன்றென முன்பே கூறியுள்ளோம்.
எனவே இங்கு மற்றுமுள்ள விஷயத்தைப்பற்றி கவனிப்போம்.
ஏதோ ஒரு சிறுவிடங்களில் ஏற்படும் துர்நடத்தையினால் தர்ம
லோபமேற்படுகின்றதெனக் கொண்டு பிரம்மசரியமென்ற பரம
விரதத்தின்மேற் குறை கூறவியலுமா? பொது ஜனங்களின்
சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டி களவாடல் கூடாதெனத்
தடுப்பதற்குச் சட்டதிட்டங்களும் கொடிய தண்டனைகளும் அர
சாங்கத்திலேற்படுத்தியிருக்கும் காலத்தும் அதையும் மீறி அதிரக
சியமாகவும் மிக்க சாதுர்யமாகவும் திருட்டுகள் நடக்கின்றன

வென்றால் அது அத்தொழிலைக் கண்டிக்கவெழுந்த கிரிமினல் சட்டங்களின் குற்றமாய் விடுமா? இத்தகைய துர்நடத்தையும் கூடாதென

स्त्रीषु दुष्टासु वार्ष्णेय जायते वर्णसंकरः।

ஸ்த்ரீஷு து³ஷ்டாஸு வார்ஷ்ணேய ஜாயதே வர்ணஸங்கர:।

(பெண்மக்கள் தீவினையகற்ற வருணநிலை கெடும்) என்று காந்தியடிகளால் பிரமாணமென வேற்றுக்கொள்ளப்பட்ட கீதாசாஸ்திரமே தெளிவுறப் புரட்டி நிற்க பிரும்மசரிய விரதமே ஸ்திரீகளின் ரகசியமான துர்நடத்தைகளுக்கு இடங்கொடுக்கின்றதென கொள்ளுவது எவ்வாற்றாலும் அமையாதென்க. இத்தகைய துர்நடத்தையினால் நமது ஸ்திரீஜன சுக வாழ்க்கைக் குற்ற பெருநோக்கங்களே சீர் குலைந்துவிடுமென்றும் காந்தியடிகள் அபிப்பிராயப்பட்டுள்ளார்கள். ஏதோ ஓர் சிலரின் தீயநடத்தையின் காரணமாக நமது ஸ்திரீஜன சமூக வாழ்க்கையே சீர் குலைந்துவிடுமா? அப்படி அற்பம்சிதைவுற்றாலும் அதை உத்தாரணஞ் செய்யவேண்டியிருக்க விதவைகளுக்குற்ற பிரம்மசரியமெனும் மதரூபமான சட்ட முறையை அறவேயொழித்து மறுமணங் கற்பிப்பது ரகசியமான தீச்செயல்களுக்கு பகிரங்கமான இடந்தருவது போலும் ஒருவன் தன்னிடமுள்ள அளவற்ற செல்வம் சிறிதளவு குறைவுபட்டதென எஞ்சியதை வாரியிறைப்பதுபோலுமல்லவா இருக்கின்றது. எமது காந்தியடிகள் கூறும் வண்ணமே மறுமணம் செய்வதாக வைத்துக்கொண்டாலும் அப்பொழுதும் தீய வழிகளில் பிரவர்த்திக்கும் மனப்பான்மை உடையோர்களின் இயற்கை குணத்தை எங்ஙனம் மாற்றவியலும்? எனவே காந்தியடிகள் கூறும் பாலிய விதவா விவாஹத்திற்கு இஃது ஓர் உற்ற காரணமாகமாட்டாது.

இதுவுமன்றி தானறிந்தமட்டில் வேதகாலத்தில் விதவைகளின் புனர் விவாகத்தைக்குறித்து பலத்த ஆக்ஷேபணைகள் இருந்ததாக நம்பத் தகுந்த ஆதாரங்கள் இல்லையெனவும் எமது காந்தியடிகள் கூறியுள்ளார்கள். இவ்விதமே மன்னார்குடி நேஷனல்ஹைஸ்கூல் மாணவர்களுக்கென நிகழ்த்தியுள்ள சொற்பொழிவிலும் பகவத்கீதையின் பெருமையைப்பற்றிப் பேசுங்காலத்து அதன்

மூன்றும் அத்தியாயத்தில் ராட்டினத்தின் மஹிமை கூறப்பட்டு ள்ளதென்றும் இளவயதில் விதவைகளாய்ப் போவதற்கும் பக வத்கீதையில் இடமே கிடையாதென்று அபிப்பிராயப்பட்டிருப்ப தாகவும் அறிகின்கிறேம். நமது எளிய இந்துமக்களின் வறுமை பிணியை யகற்றுவதற்கும் தேசத்தின் கைத்தொழிலைப் பெருக்கி அதனுல் நமது நாட்டுச் செல்வத்தை அயல் நாடுகளுக்கு வெளி யேருது நமது நாட்டிலே நிலைக்கும்படி செய்வதற்கும்உற்றதோர் இன்றியமையர்ச் சாதனமாயுள்ள கதர் பிரசார விஷயத்தில் காந் தியடிகளுக்கு யாம் மிகவும் கடமைப்பட்டுள்ளோமாயினும் உல கில் பிறவிப்பிணியையகற்றி மூத்தியெனும் பெரும்பேறு அடை யப் பார்த்தனை நிமித்தமாகக் கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனுல் வெளி யிடப் பெற்றதும் முத்திநெறி துலக்கவெழுந்ததுமான கீதாசாஸ் திரத்தின் மூன்ருவது அத்தியாயத்தில் அப்பேரின்ப வீட்டிற் குற்ற சாதனமான 'கர்மயோகம்' நன்கு புகட்டப்பட்டிருக்க கர்ம (கர்மம்) எனும் வடமொழிச் சொல்லிற்கு 'தொழில்' எனப் பொருட்படுத்திக்கொண்டு கேவலம் இவ்வுலக வாழ்க்கைக்குற்ற ராட்டினத்தின் மஹிமையே ஆங்கு கூறப்பட்டுள்ளதென்பது ஒரு சிறிதும் அமையாததென இப்பத்திரிகையின் கடந்த ஸஞ்சி கைகளில் நன்கு உணர்த்தப்பட்டிருக்கின்றது. எனவே அது பற்றி மீண்டும் கூறுதல் அவசியமன்றென நீக்கி விடயத்தைத் தொடர்வோம். வேதகாலத்தில் விதவைகளின் மறுமணத்தைக் குறித்து ஆக்ஷேபணையில்லையென்று சொல்லுங்கால் வேதகால மென்பது யெது என்னுமோர் ஐயவினு பிறக்கின்றது. ஒரு திறத்தினர் வேதங்கள் அனுதியெனவும் மற்றும் பலர் அவை கிரு ஸ்து பிறப்பதற்குப் பல நூற்ருண்டுகள் முந்தியவையெனவும் கருதுகின்றனர்.

இவ்வேத காலத்தைப்பற்றி அபிப்பிராய பேதங்களிருப்பி னும் அவை வெகுகாலத்திற்கு முந்தியவை யென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை.

(தொடரும்)

ப. வ. கணபதி சாஸ்திரி.

ஸ்ரீ ஸத்குரு பரப்ரம்மணே நம:

## ஸ்ரீ ராதாகல்யாண மஹோத்ஸவப் பத்திரிகை.

அவ்யாஜபரோபகாரமென்கிற ப்ரத்யுபகாரத்தைக் கருதாது கொடுக்கும் மேகம்போன்ற கொடையாளர்களாய், ஈசுவர பாதாரவிந்தங்களில் அசஞ்சல பக்தியுடையவர்களாயிருக்கும் தருமவான்களுக்கு ஸ்ரீ ராமச்சந்திர ஸ்வாமியினனுக்கிரஹத்தால் ஸகல ஐச்வரியங்களுமுண்டாகுக.

கலௌயுகெ கல்மஷமானஸானும், நான்யத்திர் தர்ம: கலுநிச்சயேந 1 ராமேதிவர்ணத்வயமந்தரேண, பும்ஸாம்பலேத் தாபதவார்திதாநாம் 11

இப்பாதகண்டத்திற்கு திலகம்போல் விளங்கிவருகிற நாகப்பட்டணத்திற்கு ஸமீபத்திலுள்ள புந்நாகவனம் என்னும் திவ்ய க்ஷேத்திரமாகிய நாகூரில் பெருமாள்கோவில் மேலவீதி மேல அக்கிரஹாரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ பஜனைமடத்தில் எழுந்தருளியிருக்கின்ற ஸாக்ஷாத் ஸ்ரீ வைகுண்ட நிலயவாசியாய் ஸ்ரீய:பதியாய், ஜோதிஸ்வரூபியாய், பக்தஜன ஹ்ருதய பங்கஜ நிலயவாஸியாய், எண்ணிறைனெண்ணங்களைப் பரிபூர்த்திசெய்யப் பட்டவராய் இம்மையில் தாமார்தத காமியங்களையும், மறுமையில் மோக்ஷஸாம்ராஜ்யத்தையும், கொடுக்கப்பட்டவராயுமான, ஸாக்ஷாத் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா கோலோகத்திலிருந்தும் துஷ்டத்வம்ஸ சிஷ்டஸம்ரக்ஷணார்த்தம் அவதரித்து, தன்னுடைய பரம ப்ரேயஸியர்யும், சாபத்தினால் பூலோக கோகுலத்தில் அவதரித்தவளுமான ஸ்ரீராதா தேவியினுடைய விவாஹத்தை பிருந்தாவனத்தில் காந்தர்வவிதியினால் நடத்தின திவ்விய ராதாகலியாண மஹோத்ஸவத்தை பகவத்கிருபையை முன்னிட்டு பிரபவ ஸம்வத்ஸரம் தனுர்மாஸம் 14உ முதல் 16தேதி வரையில் நடத்துவதாய் நிச்சயித்திருக்கின்றமையால் மேடி உத்ஸவத்திற்கு பக்தகோடிகள் யாவரும் தங்களிஷ்டமித்திர பந்து ஜனங்களுடன் வந்திருந்து ஜன்மஸாபல்யத்தை அடைந்து பகவத்கிருபைக்குப்பாத்திராளாகவேணுமாய் பிரார்த்திக்கிறேன்.

நாகூர்,
பிரபவ-௵
மார்கழி-௴ 4உ

இப்படிக்கு பாகவத ஸமுதாய தாஸன்,
☞ ராம. து. வீராசாமி அய்யன்.